**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)

அமர்வு வழக்கு எண். 173/2025

நாள்: 07.03.2026.

அரசு தரப்பு சாட்சி: 13

சாட்சி விசாரணையை காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரி தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞரும் உள்ளார். சாட்சி மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு உதவியாக **Thiru.R.**சரண்ராஜ்**, Assistant Programmer.** முதன்மை மாவட்ட நீதிமன்றம், மதுரை என்பவர் உள்ளார். சாட்சி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம் Grade–I Bench Clerk **திருமதி. M.ஜானகி** என்பவர் மூலம் பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிப்படுத்தப்பட்டபின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு.கோட்டைச்சாமி, ஆய்வாளர், மாடக்குளம் காவல்நிலையம் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் வருடத்திய சட்டப் பிரிவு 10–ன் படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:16:51 +0530

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோட்டைச்சாமி |
| Husband / Father Name | : | முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 40 |

**(எதிரி ஆஜர்.)**

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மதுரை மாநகர், சி6 மாடக்குளம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025 ம் தேதி 21.50 மணிக்கு நான் இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் காவல் நிலையத்தில் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து பாம்பன் அக்காள்மடம் காலனியை சேர்ந்த மனுவேல் மகன், ஜோசப் கென்னடி வயது 60 என்பவர் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்துபோன ஜோசப்கென்னடியின் பிரேதத்தை பார்த்துவிட்டு மருத்துவமனையில் இருந்த மேற்படி ஜோசப்கென்னடியின் மகளான பாம்பன் சேதுபதிநகரை சேர்ந்த செபஸ்தியான் மனைவி இளவேனில்சில்பா வயது 29 என்பவரிடம் நடந்த சம்பவம் பற்றி விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து 10.01.2025 ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப பாம்பன் காவல்நிலைய குற்ற எண்.6/2025 பிரிவுகள் 103(1) BNS 2023 ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதித்துறை நடுவர், ராமேஸ்வரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக மண்டப வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:16:57 +0530

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

பாம்பன் காவல் நிலையத்திற்கும், இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கும் இடையே 53 கிமீ தூரம் இருக்குமா என்றால் சுமார் 40 கிமீ தூரம் இருக்கும். பாம்பன் காவல் நிலையத்திற்கும், ராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கும் சுமார் 5, 6 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இராமநாதபுரம் மருத்துவமனைக்கு காவல் நிலையத்திலிருந்து 45 நிமிடம் - 01.00 மணிநேரத்திற்குள் வந்துவிடலாம் என்றால் சரிதான். அதேபோல் காவல் நிலையத்திலிருந்து ராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு 15 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் 10.01.2025ம் தேதி பகல் 12.15 மணியளவில்தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் பெறும்போது அங்கு வேறு யார்யார் இருந்தார்கள் என்றால் ஜோசப்கென்னடியின் மனைவி மரியபாக்கியம் மற்றும் உறவினர்கள் இருந்தார்கள். உறவினர்களின் பெயர்கள் தெரியாது. நான் சொன்ன மாதிரி, நேரத்தில் புகார்வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் எங்கோ இறந்து கிடந்தார் என்றும், பின்னிட்டு எதிரியை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்காக காலதாமதத்தை சரிசெய்ய வேண்டும் என்பதற்காக புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆய்வாளரின் ஆலோசனையின் படி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே ஒருபுகார் பெறப்பட்டு அது வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

| | | |
|---|---|---|
| Thiru.R.சரண்ராஜ்,<br>Assistant Programmer.<br>Principal District Court, Madurai. | Deponent | Tmt.A.Janaki,<br>Gr-I, Bench Clerk,<br>Additional District Court, Ramanathapuram. |
| Coordinator Remote site | | Coordinator Court site |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.07 12:17:02 +0530